# அற இலக்கியங்கள் காட்டும் பெண்களின் வாழ்வியல் நெறிமுறைகள்: நான்மணிக்கடிகையை அடிப்படையாக கொண்ட ஒரு சமூக, மானிடவியல் ஆய்வு.


**ராஜேந்திரன் கிருஷிகா**

சிறப்புக்கலைமாணி பட்டதாரி, சமூகவியல் மற்றும் மானிடவியல் சிறப்புக் கற்கை, சமூக விஞ்ஞானங்கள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,

தொலைபேசி இல: 0754222223, மின்னஞ்சல் முகவரி: kirushi83@gmail.com.



**ஆய்வுச்சுருக்கம்**

அறநெறிக்காலமான சங்கமருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அநேகமான நூல்கள் அறக்கருத்துக்களை எடுத்தியம்புவனவாகவும், மானிட வர்க்கத்திற்கு அறங்களினை போதிப்பனவாகவும், வாழ்க்கையின் நிலையமைப்பையும், ஒழுங்கையும் பிரதிபலிப்பனவாகவும், அவற்றை பேணுவனவாகவும், மனித சமூகத்தை நல்வழிப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன. சங்கமருவியகாலத்தில் தோன்றிய பதினோர் அற இலக்கியங்களில் நான்மணிக்கடிகையும் ஒன்று. இது விளம்பிநாகனாரால் இயற்றப்பட்ட ஒரு நீதி நூல். இவ் ஆய்வுக்கட்டுரையானது நான்மணிக்கடிகையில் குறிப்பிடப்படும் பெண்களின் வாழ்வியல் நெறிமுறைகளை பிரதிபலிக்கும் விதத்தினை எடுத்தியம்புவதை நோக்காக கொண்டு அமைந்துள்ளது. அந்தவகையில் பெண்களுக்கு இருக்கவேண்டிய பண்புகளான அழகு, கற்பு, நாணம், அன்புடைமை, காதல், ஊடல், மகிழ்ச்சி, தாய்மை, குடும்ப பொறுப்பு, கணவனுக்கு கீழ்ப்படிதல், கணவனைப் பாதுகாத்தல், சார்ந்திருத்தல், பெண்களின் அறிவு, விருந்தோம்பல் பண்பு என பல்வேறு தத்துவ, அறப் பண்புகள் நான்மணிக்கடிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவை பெண்களின் மகிமையையும், ஒழுக்கத்தையும், பெண்களின் பெருமையையும், வாழ்வியல் அறங்களையும் எடுத்தியம்புகின்றன. இவை சமூக, மானிடவியல் நோக்கில் பால்நிலைக்கட்டுமாணத்தில் பெண்களின் வகிபங்கையும், பால்நிலை பங்குகளில் பெண்களின் நிலையினையும் அதற்கூடாக பால்நிலை உறவுகள், பால்நிலை வேறுபாடுகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை எடுத்துக்கூறும் வகையில் அமைந்தாலும், காலமாற்றத்தின் காரணமாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சில வாழ்வியல் நெறிமுறைகள் தற்கால பெண்களால் கடைப்பிடிக்கப்படாத அறங்களாகவும், சமகால சூழலில் பின்பற்றப்படாத அறங்களாகவும் அமைந்துள்ளதை இவ்வாய்வு சுட்டிக்காட்டுகின்றது. இவ் ஆய்வானது விவரண ரீதியான ஆய்வாக அமைந்துள்ளது. எனவே நான்மணிக்கடிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்களின் வாழ்வியல் நெறிமுறைகளை சமூக, மானிடவியல் ரீதியில் வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் பிரதான நோக்காகும்.



**திறவுச்சொற்கள்:** நான்மணிக்கடிகை, பெண்கள், வாழ்வியல், நெறிமுறைகள், வகிபங்கு

## 1. அறிமுகம்

கி.பி 3 – 6 ஆம் நூற்றாண்டு வரையிலான சங்கமருவியகாலமான அறநெறிக்காலத்தில் அதிகளவான அற இலக்கியங்கள் தோன்றியுள்ளன. சங்ககால பதினெண்மேற்கணக்கு நூல்கள் மக்கள் எப்படி வாழ்ந்தனர் என்பதை எடுத்துக்கூறுகின்றது. ஆனால் சங்கமருவிய கால பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மக்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கான அறத் தத்துவங்களை எடுத்துக்காட்டுகின்றது. சங்கமருவிய காலத்தில் களப்பிரர் ஆட்சி நிலவியமையினால் மக்கள் வாழ்க்கை அறநெறிப்பட்டதாக அமையவில்லை. இந்நிலையில் அறநெறிப்பட்ட சமுதாயம் ஒன்றினை உருவாக்க வேண்டிய தேவை இக்காலத்தில் காணப்பட்டமையினால் சங்கமருவிய கால அற இலக்கியங்கள் எப்படி வாழ வேண்டும் என எடுத்தியம்புகின்றன. சங்கமருவிய காலத்தில் அதிகளவான அற இலக்கியங்கள் தோற்றம் பெற்றமைக்கு சமூக ஒழுக்கச் சீரழிவும், களப்பிரர் படையெடுப்பும் முதன்மையான காரணிகளாக அமைந்துள்ளன. குறிப்பாக சங்ககால களவியல் ஒழுக்கம் சங்கமருவிய காலத்திலும் தொடர்ந்தமை, அகப்புற வாழ்வில் ஏற்பட்ட சலிப்புத் தன்மை, அகப்புற வாழ்க்கையும், போர் வாழ்க்கையும் ஏற்படுத்திய தாக்கங்கள், அறக்கருத்துக்களை வலியுறுத்துகின்ற சமண, பௌத்த மதங்களின் எழுச்சியும், அச்சமயங்கள் போதித்த அறக்கருத்துக்களும், சைவ, வைணவ புலவர்களும் அறத்தைப் பாட விளைந்தமை, ஆட்சியாளர்கள் களப்பிரராக காணப்பட்டமையினால் மக்களிற்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையே உறவின்மை காணப்பட்டமை, அதனால் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்கள், ஒழுக்கச் சீர்கேடுகளும் பொருளாதார வறுமையும் இக்கால கட்டத்தில் பல்வேறு அற இலக்கியங்கள் தோன்ற காரணமாகின.

அறம் என்பது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் இயங்கிக் கொண்டிருப்பது எனப் பொருள்படுகின்றது. ஒரு மனிதன் எண்ணத்தால் எவ்வாறு மனதிற்குள் இயங்கிக் கொண்டிருக்கின்றானோ அந்த எண்ணத்தைப் போல அவனது சொல் இருக்க வேண்டும். அந்த சொல்லைப் போல அவனது நடத்தையும் இருக்க வேண்டும். எனவே சங்கமருவியகால அற இலக்கியங்கள் சமூக, மானிடவியல் நோக்கில் சமூக நிலையமைப்பிற்கும், சமூக இயங்கிற்கும், சமூக ஒழுங்கிற்கும், மக்களை வழிநடாத்த முனையும் கருவியாக கொள்ளப்படுகின்றன. இக்காலகட்டத்தில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோற்றம் பெற்று அறத்தை போதிப்பதாக இருந்தாலும் அவற்றுள் பதினோர் நூல்கள் அற இலக்கியங்களாக காணப்படுகின்றன. குறிப்பாக திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, ஆசாரகோவை, திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, பழமொழி நானூறு, இன்னாநாற்பது, இனியவை நாற்பது ஆகியவை இக்கால அறநூல்களாகும். இவ்வகையிலே அற இலக்கியங்களின் ஒன்றான நான்மணிக்கடிகையானது விளம்பி நாகனாரால் இயற்றப்பட்ட அற இலக்கியமாகும். நூற்று ஆறு பாடல்களை கொண்டதாக விளங்கும் இந்நூலில் இரண்டு கடவுள் வாழ்த்துப்பாடல்களும், நூற்று நான்கு வெண்பா பாடல்களும் உள்ளடங்குகின்றன. நான்மணிக்கடிகை என்பதில் கடிகை என்பது துண்டு, ஆபரணம் என்று பொருள்படுகின்றது. அதாவது நான்கு இரத்தினங்களால் பதித்த ஆபரணம். ஒவ்வொரு பாடலிலும் நான்கு வகையான அறக்கருத்துக்கள் கூறப்படுகின்றன. இதனால் நான்மணிக்கடிகை என அழைக்கப்படலாயிற்று.

நான்மணிக்கடிகையில் பல்வேறு அறத்தத்துவக் கருத்துக்கள் எடுத்துக்கூறப்பட்டாலும் பெண்களின் வாழ்வியல் நெறிமுறைகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. அவ்வகையிலே இவ்வாய்வுக்கட்டுரையானது சமூக மானிடவியல் நோக்கில் நான்மணிக்கடிகையில் சுட்டிக்காட்டப்படும் பெண்களின் வாழ்வியல் அறங்களை விபரண ரீதியில் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. குறிப்பாக பெண்களுக்கு இருக்கவேண்டிய பண்புகளான அழகு, கற்பு, நாணம், அன்புடைமை, காதல், ஊடல், மகிழ்ச்சி, தாய்மை, குடும்ப பொறுப்பு, கணவனுக்கு கீழ்ப்படிதல், கணவனைப் பாதுகாத்தல், சார்ந்திருத்தல், பெண்களின் அறிவு, விருந்தோம்பல் பண்பு என பல்வேறு தத்துவ, அறப் பண்புகள் நான்மணிக்கடிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவை பெண்களின் மகிமையையும், ஒழுக்கத்தையும், பெண்களின் பெருமையையும், வாழ்வியல் அறங்களையும், சமூக, மானிடவியல் நோக்கில் பால்நிலைக்கட்டுமாணத்தில் பெண்களின் வகிபங்கையும் எடுத்துக்கூறும் வகையிலும் அமைந்துள்ளது. இவை பெண்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டினாலும் சங்கமருவிய காலத்தில் பால்நிலை ரீதியில் பெண்கள் எவ்வாறு வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கால மக்களுக்கு வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது. ஆக நான்மணிக்கடிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்களின் வாழ்வியல் நெறிமுறைகளை சமூக, மானிடவியல் ரீதியில் வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்காகும்.

## 1.1. ஆய்வுப்பிரச்சினை

சமூக, மானிடவியல் நோக்கில் பால்நிலை எனும் எண்ணக்கரு முக்கியமானதாகும். ஒரு தனிநபரின் நடத்தையை வடிவமைப்பதிலும், சமூகத்தில் அவர்களுக்கான பங்கை தீர்மானிப்பதற்கும், சமூக கலாசார ரீதியில் அந்தஸ்தையும், தகுதியையும், அடுக்கமைவை தீர்மானிப்பதிலும் பால் , பால்நிலை என்பது இன்றியமையாததாக காணப்படுகின்றன. பால் என்பது பிறப்பினடிப்படையில் உயிரியல் காரணிகளால் தீர்மானிக்கப்படுவது. ஆண், பெண் ஆகிய இருபாலாருக்குமிடையிலான உயிரியல் ரீதியிலான வேறுபாட்டை அடிப்படையாக கொண்டது. பால்நிலை என்பது பால் அடிப்படையிலான உயிரியல் ரீதியான வேறுபாட்டை அடிப்படையாக கொண்டு ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் சமூகத்தாலும், கலாசாரத்தாலும் கட்டமைக்கப்பட்ட நடத்தைகள், சமூகப் பங்குகள், நெறிமுறைகள், விழுமியங்கள், தொழிற்பிரிப்பு, சமூக, பொருளாதார, கலாசார ரீதியில் கொண்டுள்ள வகிபாகம் அனைத்தையும் உள்ளடக்கியது. எனவே பால்நிலை என்பது சமூகத்தாலும், கலாசாரத்தாலும் தீர்மானிக்கப்படும் எண்ணக்கருவாக அடையாளப்படுத்தப்படுகின்றது. பால் என்பது ஆண், பெண் இருபாலாருக்கும் இடையில் உயிரியல் ரீதியாக காணப்படும் வேறுபாடுகளை குறிக்கும். அதாவது உடற்தோற்ற கூற்றியல் ரீதியில் ஆண்களும் பெண்களும் வேறுபட்டுக் காணப்படும் அம்சங்கள் பால் எனும் வகைப்படுத்தலுக்கு அடிப்படையாகின்றது. ஆண், பெண் இருபாலாரிற்கும் இடையில் சமூகப் பொறுப்புகள் வேறுபடுத்தப்பட்டு பகிர்ந்தளிக்கப்படுவதும், அப்பொறுப்புக்களிற்கேற்ப இரு பிரிவினருக்கும் இடையில் அந்தஸ்து ரீதியில் வேறுபாடு ஏற்படுத்தப்படுவதும் பால்நிலை சார்ந்த விடயமாகும். பால் வேறுபாட்டின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் சமூகவேறுபாட்டு பரிணாமமே பால்நிலையாகும். சமூகத்தில் செற்பாடுகளைச் செய்வதற்கு பொறுப்புக்கள் அளிக்கப்படும் போது ஆண்களுக்கு என செயற்பாடுகளும் பெண்களுக்கென செயற்பாடுகளும் பால் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இப்பொறுப்புக்கள் பாலினத் தன்மையை மையப்படுத்தி பிரத்தியேகமாக ஆண்களுக்குரியவை இவை எனவும் பெண்களுக்குரியவை இவை எனவம்

சமூகத்தால் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இவை சமூக மானிடவியல் நோக்கில் பால்நிலை ரீதியான வேறுபாடுகள், பாராபட்சப்படுத்தல்களையும், ஓரங்கட்டப்படுத்தல்களையும், புறந்தள்ளல், சமூக அடுக்கமைவில் சமூக அசமத்துவத்தை ஏற்படுத்தல் என்பவற்றை வெளிக்காட்டுவதாக அமைந்தாலும் இலக்கியங்களின் அடிப்படையில் அவை காலத்தின் கண்ணாடியாகவே நோக்கப்படுகின்றது. இலக்கியங்களின் அடிப்படையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பால்நிலை சார் காரணியை அடிப்படையாக கொண்டு சமூக மானிடவியல் நோக்கில் பால்நிலை உறவுகள், பால்நிலை பங்குகள், பால்நிலை வேறுபாடுகள், பால்நிலை அடையாளத்துவம் எவ்வாறு காணப்பட்டன என்பதை விளக்குவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

அதாவது சங்கமருவிய கால அற இலக்கியங்களில் ஒன்றான நான்மணிக்கடிகையில் பெண்களின் வாழ்வியல் நெறிமுறைகளான அழகு, கற்பு, நாணம், அன்புடைமை, காதல், ஊடல், மகிழ்ச்சி, தாய்மை, குடும்ப பொறுப்பு, கணவனுக்கு கீழ்ப்படிதல், கணவனைப் பாதுகாத்தல், சார்ந்திருத்தல், பெண்களின் கல்வியறிவு, விருந்தோம்பல் பண்பு என்பன சுட்டிக்காட்டப்படுகின்றன. இவை சமூக மானிடவியல் நோக்கில் பால்நிலை சார் கட்டுமாண ரீதியில் சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் பெண்கள் எந்தளவு பங்கு பெறுகின்றனர் என்பதை விபரிப்பதாக அமைந்துள்ளது. சங்கமருவிய காலத்தில் பெண்கள் எவ்வாறு அறக்கருத்துக்களுக்கு உட்பட்டு வாழ்ந்துள்ளனர் என்பனவும், எவ்வாறு வாழ வேண்டும் என்பனவும், தற்கால சமூகத்திற்கு பண்டையகால வாழ்வியல் நெறிமுறைகளை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. சங்கமருவிய கால அற இலக்கியமான நான்மணிக்கடிகையில் பெண்கள் பெறும் அந்தஸ்து, சமூக, பொருளாதார, கலாசார பங்கு, பால்நிலை உறவுகள், பால் நிலை பங்குகள் எந்தளவு காணப்பட்டுள்ளன என்பதே இவ்வாய்வின் ஆய்வுப்பிரச்சினையாகும்.

## 1.2. ஆய்வின் நோக்கம்.

இவ்வாய்வானது சங்கமருவியகால அற இலக்கியமான நான்மணிக்கடிகையில் சுட்டிக்காட்டப்படும் பெண்களின் வாழ்வியல் நெறிமுறைகளை சமூக மானிடவியல் நோக்கில் வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் பிரதான நோக்காகும். பால்நிலை ரீதியில் பெண்கள் பெறும் பங்கு, பால்நிலை உறவுகள், அந்தஸ்து என்பவற்றை வெளிப்படுத்துவதோடு, சங்கமருவிய காலத்தில் மக்கள் எவ்வாறு வாழ்ந்துள்ளனர் எனவும், எவ்வாறு வாழ வேண்டும் என்பதையும், தற்காலத்தில் அவ் நெறிமுறைகள் பின்பற்றப்படும் விதத்தின் தன்மையையும் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

## 1.3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது விபரண ரீதியான ஆய்வாக காணப்படுகின்றது. தரவு சேகரிக்கும் பொருட்டு இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் பொருட்டு நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆய்வுகளின் உட்பரிமாணங்கள் என்பன இரண்டாம் நிலைத் தரவு சேகரிக்கும் முறைகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 1.4. ஆய்வின் வரையறை

சங்கமருவிய காலத்தில் எழுந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினோர் அற இலக்கியங்கள் காணப்பட்டாலும் இவ்வாய்வானது நான்மணிக்கடிகையை அடிப்படையாக கொண்டதாக வரையறுக்கப்படுகின்றது. நான்மணிக்கடிகையில் மக்களுக்கான வாழ்வியல் நெறிமுறைகள், ஆடவர்களுக்கான வாழ்வியல் நெறிமுறைகள், பொதுவான நெறிமுறைகள் என விரவி காணப்பட்டாலும் இவ்வாய்வானது குறிப்பாக பெண்களின் வாழ்வியல் நெறிமுறைகளை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

## 2. பகுப்பாய்வும் பெறுபேறுகளும்

சங்கமருவியகாலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் பதினோர் நூல்கள் அறஇலக்கியங்கள் ஆகும். அவற்றுள் நான்மணிக்கடிகையும் ஒன்று. நான்மணிக்கடிகையில் பல்வேறு தத்துவக்கருத்துக்களும், அறக் கருத்துக்களும் எடுத்துக் கூறப்பட்டாலும் இவ்வாய்வுக்கட்டுரையானது பெண்களின் வாழ்வியல் நெறிமுறைகளை சமூக, மானிடவியல் பார்வையில் விளக்குவதாக அமைந்துள்ளது. நான்மணிக்கடிகையில் பெண்களுக்கு இருக்கவேண்டிய பண்புகளான அழகு, கற்பு, நாணம், அன்புடைமை, காதல், ஊடல், மகிழ்ச்சி, தாய்மை, குடும்ப பொறுப்பு, கணவனுக்கு கீழ்ப்படிதல், கணவனைப் பாதுகாத்தல், சார்ந்திருத்தல், பெண்களின் அறிவு, விருந்தோம்பல் பண்பு என பல்வேறு தத்துவ, அறப் பண்புகள் சுட்டிக்காட்டப்பட்டாலும் இவற்றுக்கு பால்நிலை ரீதியில் பெண்களுக்கு வழங்கப்படும் அந்தஸ்து, தகுதி, பால்நிலை பங்குகள், பால்நிலை உறவுகள் சமூக, கலாசார, பொருளாதாரத்தில் பெண்களின் வகிபங்கு எவ்வகையில் காணப்பட்டது என்பதை விளக்குவதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## 2.1. சமூகப் பங்குகள் (Social Roles)

சமூகப் பங்கு எனும் போது பால்நிலை ரீதியில் பெண்களுக்காக பகிர்ந்தளிக்கப்படும் பொறுப்புக்கள் இவற்றுள் அடங்கும். சமூகத்தில் குறிப்பிட்ட வேலைகளை ஆண்கள் தான் செய்ய வேண்டும் என்றும், குறிப்பிட்ட வேலைகளை பெண்கள் தான் செய்ய வேண்டும் என்றும் பிரித்து நோக்கப்படுகின்றது. இதனடிப்படையில் நான்மணிக்கடிகையில் பெண்கள் குடும்ப வாழ்க்கையில் எவ்வாறு இருக்க வேண்டும், இல்லறவாழ்வில் எவ்வாறு இருக்க வேண்டும், அவர்களுடை மீளுற்பத்திப் பங்கு, குழந்தைப் பராமரிப்பு, விருந்தோம்பல் பண்பு, கணவனுடன் கொண்டிருக்கும் உறவுஎன்பவற்றை உள்ளடக்கியதாக பெண்களுக்கான சமூகப் பங்குகள் இருக்கவேண்டும் என்பதை பல பாடல்களில் சுட்டிக்காட்டுவதை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது.

### 2.1.1. அன்பு

பெண்களின் இன்சொல்லும், பெண்களின் நல்லுள்ளமும் ஆண்களுக்கு அன்பையும், காதலையும், உறவுகளையும் ஏற்படுத்துகின்றது. பெண்களின் வார்த்தைகளாலும், இன்சொல்லாலும் மிக்க மகிழ்ச்சி உண்டாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''கல்லில் பிறக்கும் கதிர்மணி ; காதலி*

*சொல்லில் பிறக்கும் உயர்மதம்''* **(நான்மணிக்கடிகை: 5: 1,2)**

மனைவி மீது அடிமைப்பட்டவர் தூங்கமாட்டார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''கள்வம் என்பார்க்கு துயில் இல்லை ; காதலிமாட்டு*

*உள்ளம் வைப்பார்க்கும் துயில் இல்லை''* **(நான்மணிக்கடிகை : 7: 1,2)**

பெண்களின் இரக்கத்தால் அயலில் உள்ள சுற்றத்தாரின் உறவு வளரும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''வன்கண் பெருகின் வலிபெருகும் ; பால்மொழியார்*

*இன்கண் பெருகின் இனம் பெருகும்''* **(நான்மணிக்கடிகை : 91: 1,2)**

இவற்றின் மூலம் பெண்களின் வார்த்தைகளில் வெளிப்படும் இன்சொல்லால் கணவனுக்கும், சுற்றத்தாருக்கும் ஏற்படும் அன்பும், உறவும் வெளிப்படுகின்றது. இதன் மூலம் பெண்கள் அன்புக்குரியவர்கள் என்பதும், உறவுகளை வளர்த்துக் கொள்பவர்கள் என்பதும் தெளிவாகின்றது.

### 2.1.2. ஊடல்

பெண்களின் ஊடலும் நான்மணிக்கடிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெண்கள் முகத்தினால் தங்களது ஊடலை வெளிப்படுத்துவர்.

*'' முகத்தால் நோய் செய்வர் மகளிர்''* **(நான்மணிக்கடிகை: 12: 3)**

ஊடலால் இன்பம் கணவனிடத்தில் இருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கும் பெண்கள் அவ் ஊடலினால் வரும் இன்பத்தை அறியாத கணவரிம் ஊடல் கொள்வதில் பயனில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''பாடல்சாம் பண்அறியா தார்முன்னர்; ஊடல்சாம்*

*ஊடல் உணரார் அகத்து''* **(நான்மணிக்கடிகை: 45: 3,4)**

இதன் மூலம் பெண்கள் கணவனிடத்திலிருந்து இன்பத்தை பெற ஊடல் கொள்ள முனையும் பாங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### 2.1.3. இல்லறப்பண்பு

தமிழிலக்கியங்கள் வாழ்க்கையின் யதார்த்தத்தை பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். அவ்வகையிலே சங்கமருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் பல இல்லறப்பண்புகள் குறிப்பிடப்பட்டாலும் அற இலக்கியமான நான்மணிக்கடிகையில் பெண்கள் இல்லறத்திற்கு எவ்வாறான ஒளியாக இருக்கின்றனர் என்பனவும், கணவனுக்கு கீழ்ப்படிந்து வாழவேண்டும் எனவும், மக்கட்பேறு, குழந்தை பராமரிப்பு, விருந்தோம்பல் என பல இல்வாழ்க்கைக்குரிய

அறக்கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பெண்களே ஒரு இல்லத்திற்கு குலவிளக்காக நான்மணிக்கடிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இல்வாழ்க்கைக்கு செல்வம் தருவது சிறந்த பண்புள்ள பெண்களாவார்கள்.

*''மனைக்கு ஆக்கம் மாண்ட மகளிர்''* **(நான்மணிக்கடிகை: 18: 1)**

வீட்டுக்கு பாழாவது ஒளிபொருந்திய நெற்றியையுடைய மனையாள் இல்லாமை. மனைவியில்லாத வீடு பயனற்றது. இதில் பெண்களின் அழகும் வர்ணிக்கப்படுகின்றது. அதேபோன்று நல்ல குணமுடைய பெண் இல்லாத வீடு பாழான வீட்டைப் போன்றதாக இருக்கும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

*''மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை''* **(நான்மணிக்கடிகை: 20: 1)**

*''யாழ்ஒக்கும் நட்டார் கழறும்சொல் ; பாழ்ஒக்கும்*

*பண்புடையாள் இல்லா மனை''* **(நான்மணிக்கடிகை: 99: 3,4)**

அழகுடன் இல்லறத்தை நடத்தும் அறிவும் உடையவளே குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற பெண்ணாவாள். இல்லறமும் குடும்ப வாழ்க்கையும் சிறக்க அழகும், அறிவும் கொண்ட பெண்களே காரணமாகின்றனர்.

*''ஒருதொடையான் வெல்வது கோழி ; உருவோடு*

*அறிவுடையாள் இல்வாழ்க்கைப் பெண்என்ப''* **(நான்மணிக்கடிகை: 53: 2,3)**

வீட்டுக்கு ஒளியாக இருப்பவர் பெண்கள். மனைக்கு ஒளிவீசும் விளக்கு மனைவி என குறிப்பிடப்பட்டுள்ளது.

''மனைக்கு விளக்கம் மடவார்'' **(நான்மணிக்கடிகை: 103: 1)**

எனவே ஒரு இல்லம் சிறக்க வேண்டுமாக இருந்தால் பெண்கள் அவ் இல்வாழ்க்கைக்கு மூலகருவியாகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.1.4. தாய்மை

பெண்களின் சமூகப் பங்குகளில் அவர்களின் மீளுற்பத்திப் பங்கானது முக்கியமானதாகும். பெண்களின் மீளுற்பத்தியே தாய்மை என்ற பெறுபேற்றைக் கொடுக்கின்றது. அதாவது பெண்கள் தமது பாலினத்தன்மையின் பிரகாரம் பிள்ளைகளைப் பெறுகின்றனர். அத்தோடு அவற்றை பேணிப்பராமரிக்கும் பொறுப்பினையும் ஏற்கின்றனர். அவ்வகையிலே நான்மணிக்கடிகையில் பெண்களின் தாய்மை என்ற பண்பு பற்றி பல பாடல்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தாய் அடித்தாலும் குழந்தை அம்மா என்று அலறிக் கொண்டு அவளிடமே ஓடும்.

*''மலைப்பினும் வாரணம் தாங்கும்; அலைப்பினும்*

*அன்னேயென்று ஓடும்''* **(நான்மணிக்கடிகை: 23: 1,2)**

குழந்தைகள் அனைவரும் தாயின் முலைப்பாலை எதிர்பார்த்து உயிர்வாழுவர். குழந்தைகள் தாயின் முலைப்பாலினால் உயிர்வாழ்வர்.

*''கோல்நோக்கி வாழும் குடியெல்லாம்; தாய்முலைப்*

*பால்நோக்கி வாழும் குழவிகள்''* **(நான்மணிக்கடிகை: 27: 1,2)**

என்ன துன்பத்தைச் செய்தாலும் தாயைக் காட்டினும் உயர்ந்த உறவினர் ஒருவரும் இல்லை. தாயே சிறந்த உறவு என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''அந்தணரின் நல்ல பிறப்பில்லை; என்செயினும்*

*தாயின் சிறந்த தமர்இல்லை''* **(நான்மணிக்கடிகை: 33: 1,2)**

தாய் என்று சொல்லப்படுகின்றவள் முன்பு தான் செய்த நல்வினையாகும். முன்பு செய்த நல்வினையே தாய் என்ற பேறு.

*''தந்தை எனப்படுவான் தன்உவாத்தி; தாய் என்பாள்*

*முந்துதான் செய்தவினை''* **(நான்மணிக்கடிகை: 43: 3,4)**

தாயுடன் சமமாக நினைக்கத்தக்க எந்தக் கடவுளும் இல்லை. தாயே சிறந்த செல்வம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''ஒண்மையவாய்ச் சான்ற பொருள் இல்லை; ஈன்றாளோடு*

*எண்ணக் கடவுளும் இல்''* **(நான்மணிக்கடிகை: 55: 3,4)**

பெண்களுக்கு ஒளி நல்ல குணங்கள் நிறைந்த புதல்வர்கள். அதாவது ஆண்குழந்தைகளே பெண்களுக்கு ஒளியை கொடுப்பவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''மனைக்கு விளக்கம் மடவார் ; மடவார்*

*தமக்குத் தகைசால் புதல்வர்''* **(நான்மணிக்கடிகை: 103: 1,2)**

எனவே தாய்மை என்பது பெண்களுக்கு உரிய வகிபங்கு. இது பெண்களின் மீளுற்பத்திப் பங்கு. ஒரு குழுந்தை பிறப்பதற்கும், வளர்வதற்கும், நல்வினையால் தோன்றும் ஒரே உறவு தாய் என்று நான்மணிக்கடிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் வீட்டுத்தளத்தில் பெண்களின் பங்கும், இல்லற பண்பும், குழந்தைகளை பெறுவதும், அவர்களை பேணிப்பராமரிக்கும் பொறுப்பும் பெண்களுக்கே உரியது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### 2.1.5. கணவன் மனைவி உறவு

நான்மணிக்கடிகையில் பெண்கள் கணவனுடன் நெருக்கமான உறவு கொள்ள வேணுடும் எனவும், கணவனுக்கு கீழ்ப்படிந்து, கணவனில் சார்ந்து வாழ வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கணவன் தயங்குவானாயின் மான் போன்ற மனைவியும் தன் கடமையில் தவறுவாள். அதாவது கணவன் கலக்கமடைந்தாள் மனைவியும் கலங்குவாள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கணவனுக்கும், மனைவிக்கும் இடையிலான தொடர்பு வெளிக்காட்டப்பட்டுள்ளதோடு பெண்ணின் அழகை மானுக்கு ஒப்பிடுவதும் தெளிவாகின்றது.

*''பெற்றான் அதிர்ப்பின் பிணை அன்னாள்தான் அதிர்க்கும்''* **(நான்மணிக்கடிகை: 19: 1)**

கணவனைப் பாதுகாத்து அவன் விருப்பத்தின்படி வாழ்வாளாயின் சிறந்த பண்புகளையுடைய பெண் இன்பந் தருவாள். அதாவது கணவன் வழிநிற்கும் பெண்களால் தான் இன்பம் உண்டு மனைவியின் வழிபாடு கணவனுக்கு மகிழ்ச்சி தரும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''தொகைஇனிது தொட்டு வழங்கின் ; தகைஉடைய*

*பெண்இனிது பேணிவழிபடின்''* **(நான்மணிக்கடிகை: 37: 2,3)**

குலமகளுக்குத் தன்னை மணந்துகொண்ட கணவனைவிட நெருங்கி உறவினர் வேறு யாரும் இல்லை. கணவனே சிறந்த உறவு என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''கண்ணின் சிறந்த உறுப்பில்லை ; கொண்டானின்*

*துன்னிய கேளிர் பிறர்இல்லை''* **(நான்மணிக்கடிகை: 55: 1,2)**

கணவனுடன் ஒன்றுபட்டு அவனை உற்சாகப்படுத்துதல் பெண் மக்களின் செயலின் சிறப்பாகும். அதாவது பெண்களின் நல்ல செயல் கணவனுடன் ஒன்றுபட்டு வாழ்தல் ஆகும்.

*''ஒன்றுஊக்கல் பெண்டிர் தொழில்நலம் ; என்றும்''* **(நான்மணிக்கடிகை: 85: 1)**

கணவனைத் தவிர வேறு தெய்வத்தை வணங்காமலிருப்பவளே கற்புள்ள பெண்ணாவாள். அதாவது தெய்வத்தை வணங்காமல் கணவனை வணங்குகின்றவளே கற்புள்ள பெண். பண்புடைய பெண்கள் வாழ்க்கை முறை அறிவர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

*''வணங்கல் அணிகலம் சான்றோர்க்கு; அ.்.தன்றி*

*அணங்கல் வணங்கின்று பெண்''* **(நான்மணிக்கடிகை: 89: 3,4)**

எனவே கணனையே தெய்வமாக மதிக்க வேண்டும், கணவனுக்கு துணையாக மனைவி இருக்க வேண்டும், கணவனை மேம்படுத்துவது மனைவியின் செயல். இதன் மூலம் சமூகப் பங்கில் கணவனுடன் இணைந்து, கணவனுக்கு சார்ந்து வாழ்வதே பெண்களின் நற்பண்பு என குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.1.6. பெண்களின் அறிவு

பெண்கள் அறிவும் ஆற்றலும் உடையவளாக இருக்க வேண்டும். அறிவும் ஆற்றலும் உடையவளே இல்லறத்திற்கேற்ற பெண். அதாவது அழகுடன் இல்லறத்தை நடத்தும் அறிவும் உடையவளே குடும்ப வாழ்வுக்கு ஏற்ற பெண் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. **(மேலது, நான்மணிக்கடிகை : 53, 2,3).**

பின்வருவதை முன்னறியாத பெண்கள் தமது கணவருக்கு நோய் போன்றவர். எனவே வரவுக்கு மேல் செலவு செய்யாமல் பின்வருவதை நன்கு முன்னறிந்து பெண்கள் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

*''பிணிஅன்னர் பின்நோக்காப் பெண்டிர்''* **(நான்மணிக்கடிகை: 32:1)**

எனவே குடும்பம் சிறக்கவும், இல்லறம் சிறக்கவும் பெண்கள் அறிவும் ஆற்றலும் கொண்டவர்களாக இருப்பதோடு பின்வருவதை எண்ணி எக்காரியங்களையும் செய்ய வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.1.7. விருந்தோம்பல்

இல்லறப்பண்புகளில் விருந்தோம்புதல் என்பது இன்றியமையாததாகும். நான்மணிக்கடிகையில் பெண்களுக்கான தனித்துவமான பண்பாக விருந்தோம்பல் சுட்டிக்காட்டப்படவில்லை என்றாலும் அவர்கள் கணவனையும், குழந்தைகளையும், ஏழைகளையும், அயலவர்களையும் ஆதரிப்பதில் விருந்தோம்பலும் சிறந்ததாக சுட்க்காட்டப்பட்டுள்ளது.

தான் ஏழைகளுக்கு அளிக்கும் சோற்றின் மூலம் அவன் பிறந்த குடும்பம் சிறப்படையும். அதாவது ஏழைகளுக்கு உணவளிப்பவன் குடும்பம் பெருமையடையும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''ஏற்றான்வீறு எய்துமட் இனநிரை; தான் கொடுக்கும்*

*சோற்றான்வீறு எய்தும் குடி''* **(நான்மணிக்கடிகை: 70: 3,4)**

வறியவர்களுக்கு ஏதேனும் கொடுப்பதானால் சோறு கொடுக்க வேண்டும். ஆகவே ஏழைகளுக்கு உணவிடுக என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''கொடுப்பின் அசனம் கொடுக்க''* **(நான்மணிக்கடிகை: 80:1)**

இதன் மூலம் பெண்களின் இல்லறப்பண்புகளில் விருந்தோம்பல் எவ்வாறு அமைய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2.2. பொருளாதார பங்கு (Economic Role)

பொருளாதார ரீதியாக பெண்கள் சுயமாக வருமானம் ஈட்டுபவர்களாகவும், தொழிலில் ஈடுபடுபவர்களாகவும் இருக்க வேண்டிய விடயங்கள் பற்றி நான்மணிக்கடிகையில் குறிப்பிடப்படவில்லை. பெண்கள் கணவனில் சார்ந்து வாழவேண்டும் எனவும், கணவனின் உழைப்பிலே தங்கியிருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பெண்கள் இல்லறத்திற்குரிய தொழில்களையும், பிள்ளைகளை பராமரிப்பது, கணவனை பேணிப்பாதுகாப்பது பற்றியுமே குறிப்பிடப்பட்டுள்ளது. பின்வருவதை முன்னறியாத பெண்கள் தமது கணவருக்கு நோய் போன்றவர். எனவே வரவுக்கு மேல் செலவு செய்யாமல் பின்வருவதை நன்கு முன்னறிந்து பெண்கள் செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. **(மேலது : நான்மணிக்கடிகை: 32:1).**

வீட்டில் வருமானம் குறைந்தால் மனையாள் முறைதவறிப் பேசுவாள். இதன் மூலம் கணவனின் உழைப்பிலே மனைவி வாழ்வது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

*''ஏரி சிறிதாயின் நீர்ஊரும்; இல்லத்து*

*வாரி சிறிதாயின் பெண்ஊரும்''* **(நான்மணிக்கடிகை : 100:1,2)**

இதன் மூலம் பெண்கள் பொருளாதார ரீதியாக கணவனின் உழைப்பிலே வாழவேண்டும் எனவும், கணவனை தெய்வமாக போற்றவேண்டும் எனவும், பெண்கள் தாங்களாக சுயதொழிலில் ஈடுபடாமல் கணவனில் சார்ந்து இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

## 2.3. கலாசார பங்கு (Cultural Role)

கலாசாரம் என்பது ''அறிவு, நம்பிக்கை, கலை, சட்டம், ஒழுக்கங்கள், வழக்காறு மற்றும் ஒரு சமூக உறுப்பினராக மனிதனால் பெறப்படுகின்ற எந்தவொரு கொள்ளளவுகள் மற்றும் பழக்க வழக்கங்கள் என்பவற்றை உள்ளடக்கிய முழுமையாகும் என எட்வர் ரெயிலர் குறிப்பிடுகின்றார். கலாசாரம் என்பது பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள், விழுமியங்கள், நடத்தைகள் என்பன தலைமுறையாக பரிமாற்றப்படுகின்ற செயன்முறையாகும். அவ்வகையில் நான்மணிக்கடிகையில் பெண்கள் கலாசார ரீதியாக எவ்வகையில் பங்கு வகிக்க வேண்டும் என்பது அவர்களது நாணம், கற்பு, அழகு ஆகிய கலாசாரக் கூறுகளுக்கூடாக தெளிவுபடுத்தப்படுகின்றது.

### 2.3.1. நாணம்.

நான்மணிக்கடிகையில் பெண்களுக்கு அழகு, நாணம் என்பன பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாணம் அமையும் தன்மை பெண்தன்மையான கற்பு எனும் நன்மைக்கு அழகாகும். எனவே பெண்களுக்கு அழகு தருவது நாணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**(நான்மணிக்கடிகை : 09: 2,3)**

பெண்கள் நாணம் உள்ளவர்களாக இருந்தால் நல்ல குணங்களையுடையவர்கள் விரும்புவார்கள். நாணம் இல்லாதோரை தீயோர் விரும்புவதற்கு காரணம் அவர்களின் கெட்ட ஒழுக்கமாகும். எனவே நாணம் உள்ள பெண்களைப் பெரியோர் விரும்புவர். நாணமற்ற பெண்களின் கெட்ட ஒழுக்கத்தை தீயோர் விரும்புவர். **(நான்மணிக்கடிகை : 54: 3,4)**

விரும்பப்பட்ட நாணத்தின் எல்லையிலே நிற்பவர்களே நல்ல பெண்களாவார். நல்ல பெண்கள் நாணத்தை கைவிடமாட்டார்கள்.

*''நாணின் வரைநிற்பர் நற்பெண்டிர்''* **(நான்மணிக்கடிகை : 88:3)**

நாணமில்லாது வாழ்வார்களேயானால் பெண்களின் அழகு தீமை தரும். எனவே நாணமற்ற பெண்களின் அழகு தீமை தரும். நாணமின்றி முன்வந்து நிற்பது நல்ல பெண்ணுக்கும் தீது என குறிப்பிடப்படுகின்றது. **(நான்மணிக்கடிகை : 93: 2,3)**

எனவே பெண்கள் நாணம் கொண்டவர்களாக வாழ வேண்டும். நாணமே ஒரு பெண்ணுக்கு அழகையும், கற்பையும் கொடுக்கின்றது என்ற வாழ்வியல் நெறி நான்மணிக்கடிகையில் குறிப்பிடப்படுகின்றது.

### 2.3.2. கற்பு

நான்மணிக்கடிகையில் பெண்கள் கற்புடன் வாழ வேண்டும். கற்புத் தான் பெண்ணுக்கு அழகை கொடுக்கின்றது, மற்றவர்களால் போற்றப்படுவதற்கும் காரணமாகின்றது என குறிப்பிடப்படுகின்றது. பெருந்தன்மையில்லாத ஆண்களை விட கற்பு நெறியிலே நின்ற பெண்கள் சிறந்தவர்கள். எனவே பெருந்தன்மையற்ற ஆண்மக்களை விட கற்புள்ள பெண்களே சிறந்தவர்கள். இங்கு பெண்கள் கற்புடன் வாழ வேண்டும். கற்புடன் வாழ்ந்தால் ஆண்களை விட போற்றப்படுவார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. **(நான்மணிக்கடிகை : 13: 1,2)**

வீட்டில் இருந்து கொண்டு கெட்டவழியில் நடக்கின்ற பெண் தன் கணவனுக்கு எமனாவாள். கெட்ட நடத்தையுள்ள மனைவி எமனுக்கு ஒப்பானவள். எனவே கற்பு நெறியில் இருந்து ஒரு பெண் விலகுவானால் கணவனுக்கு எமனைப் போன்றவள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

*''அல்லவை செய்வார்க்கு அறம்கூற்றம் ; சுற்றமே*

*இல்லத்துத் தீங்குஒழுகு வாள்''* **(நான்மணிக்கடிகை : 83: 3,4)**

நல்ல குணமுளள்ள பெண் கற்பின் இயல்பிலேயே அடங்கி நடப்பாள். கட்டுப்பாடு இல்லாதவள் கணவன் பாதுகாத்தாலும் தான் விரும்பிய விதமே நடப்பாள். அதாவது நல்ல பெண் கற்பு நெறியில் நடப்பாள். கெட்ட பெண் கணவன் காத்தாலும் கற்பிழப்பாள் என குறிப்பிடப்பட்டுள்ளது. **(நான்மணிக்கடிகை : 90: 1,2)**

எனவே பெண்களுக்கு கற்பு என்பது கலாசார ரீதியாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்பது பண்பாட்டு ரீதியாக பரிமாற்றப்பட்டு அதன் படியே கலாசாரத்தில் பெண்கள் பங்கேற்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

### 2.3.3. அழகு

பெண்கள் குடும்ப பெண்ணாக பங்கேற்பதற்கும், கணவனுக்கு மனைவியாக இருப்பதற்கும் நல்ல பண்புகளும், குணங்களும், அழகும் இருக்க வேண்டும் என நான்மணிக்கடிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அழகுடன் இல்லறத்தை நடத்தும் அறிவும் உடையவளே குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற பெண் என குறிப்பிடப்படுகின்றது. **(நான்மணிக்கடிகை : 53: 2,3)**

பெண்கள் அழகற்றவர்களாக இருந்தாலும் சிறந்த குணங்கள் இருக்க வேண்டும். அதாவது அழகற்ற பெண்களில் சிறந்த குணமுள்ள பெண்களும் உண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது.

**(நான்மணிக்கடிகை : 63: 1,2)**

பெண்களுக்கு அழகை கொடுப்பது நாணம். பெண்கள் நாணமற்று வாழ்வார்களேயானால் பெண்ணின் அழகு தீமை தரும் என குறிப்பிடப்பட்டுள்ளது. **(மேலது, நான்மணிக்கடிகை : 93: 2,3)**

ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்த பெண்களின் முன் அழகில்லாத ஆண்கள் பெருமையடையமாட்டார்கள். அதாவது அழகுள்ள பெண்களுக்கு முன் அழகற்ற ஆண்களுக்கு இடமில்லை. அழகே பெண்களுக்கு அந்தஸ்தை வழங்குகின்றது என இப்பாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

*"வால்இழையார் முன்னர் வனப்புஇலார் பாடுஇலர்"* **(நான்மணிக்கடிகை : 97: 1)**

எனவே பெண்களின் அழகே அவர்களுக்கான அந்தஸ்தையும், இல்லறத்திற்கான சிறப்பையும் வழங்குகின்றது என்பது தெளிவாகின்றது.

இவற்றை தொகுத்து நோக்கும் போது பால்நிலை உறவுகளின் (Gender Relations) அடிப்படையில் ஆண்கள், பெண்கள் என்ற பாகுபாடு நான்மணிக்கடிகையில் குறிப்பிடப்படும் அறக்கருத்துக்களில் காணப்படுவதை நாம் காணலாம். அதாவது ஆண்கள் எவ்வாறு வாழ வேண்டும், பெண்கள் எவ்வாறு தனது கணவருடன் ஒன்று பட்டு வாழ வேண்டும், இல்லறப்பண்புகள் பெண்களுக்கே உரியனவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. குழந்தைகளை பராமரித்தல், கணவனைப் பேணிப் பாதுகாத்தல், கணவனையே வணங்குதல் வேண்டும், நாணமும் கற்புமே பெண்ணுக்கு அழகு என்பதனடிப்படையில் பெண்கள் சமூகப், பொருளாதார பங்குகளில் ஆண்களில் சார்ந்திருக்கும் அதேவேளை நான்மணிக்கடிகையில் குறிப்பிடப்படும் சில கருத்துக்கள் குறிப்பாக அழகுள்ள பெண்களுக்கு முன் அழகற்ற ஆண்களுக்கு இடமில்லை என்பது ஆண்களை பின்நோக்கிப் பார்ப்பனவாக அமைந்துள்ளன. எனவே பால்நிலை உறவுகளின் அடிப்படையில் நான்மணிக்கடிகையில் குறிப்பிடப்படும் கருத்துக்கள் பால்நிலை வேறுபாட்டையே (Gender Differences) வெளிப்படுத்துவதை இவ்வாய்வு வெளிப்படுத்துகின்றது. கலாசார பங்குகளின் அடிப்படையில் சங்ககாலம், சங்கமருவிய காலத்தில் ஏற்பட்ட ஒழுக்க சீர்கேடுகள், ஆட்சி மாற்றம், அகப் புற வாழ்வில் ஏற்பட்ட சலிப்புக்களின் காரணமாக பெண்கள் நாணம், கற்கு, அழகு கொண்டவர்களாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது. எனவே சமூக ஒழுங்கையும், சமூக நிலையமைப்பையும் பேணும் முகமாக சங்கமருவியகால அறஇலக்கியங்களில் ஒன்றான நான்மணிக்கடிகையில் பெண்களுக்கான வாழ்வியல் நெறிமுறைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே சமூக மானிடவியல் நோக்கில் பால்நிலை பங்குகள் (Gender Roles), பால்நிலை உறவுகள் (Gender Relations) சங்கமருவியகால அற இலக்கியமான நான்மணிக்கடிகையில் எவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனவும், பெண்களுக்கான வாழ்வியல் நெறிமுறைகள் சங்கமருவிய காலத்தில் காணப்பட்ட விதத்தினையும், பெண்கள் சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களின்பால் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றனர் எனவும், இவற்றில் பெண்களின் பங்கை விபரிப்பதாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளது. இருந்தபோதிலும் சங்கமருவிய காலத்தில் குறிப்பிடப்படும் பெண்களுக்கான வாழ்வியல் நெறிமுறைகளில் சில நெறிமுறைகள் இன்றைய காலப் பெண்களால் கடைப்பிடிக்கப்பட்டாலும் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. எனவே காலமாற்றத்தின் காரணமாக நவீன, தொழில்நுட்ப யுகமான இன்றைய காலகட்டத்தில் சமூக, பொருளாதார, கலாசார கட்டுமாணத்தில் பெண்களுக்காக குறிப்பிடப்படும் வாழ்வியல் நெறிமுறைகள் முற்றிலும் மாறுபட்டதாக அமைந்துள்ளதை காணலாம்.

## முடிவுரை

இவ்வாய்வானது சங்கமருவியகால அற இலக்கியங்களில் ஒன்றான நான்மணிக்கடிகையில் வெளிப்படும் பெண்களின் வாழ்வியல் அறங்களை சமூக, மானிடவியல் நோக்கில் ஆராய்வதாக அமைந்துள்ளது. பால்நிலை சார் காரணிகளின் அடிப்படையில் நான்மணிக்கடிகையில் பெண்களுக்கான வாழ்வியல் நெறிமுறைகளில் வெளிப்படும் பால்நிலை உறவுகள், பால்நிலை வேறுபாடுகள், பால்நிலை பங்குகளின் அடிப்படையில் பெண்களின் சமூகப்பங்கு, பொருளாதாரப் பங்கு, கலாசாரப் பங்கு எவ்வகையில் காணப்படுகின்றன என்பதை தெளிவுபடுத்துகின்றது. இவை பெண்களின் மககிமையையும், சிறப்பையும், பெண்கள் எவ்வாறு அறநெறிக்குட்பட்டு வாழ வேண்டும் என்பதற்கான சமூகக் கட்டுப்பாடுகளை வகுத்து அதற்கூடாக சமூக நிலையமைப்பையும், சமூக ஒழுங்கையும் பேணுவதாக அமைந்தாலும் பால்நிலைசார் உறவுகள் எவ்வகையில் காணப்பட்டுள்ளன என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அத்துடன் நான்மணிக்கடிகையில் குறிப்பிடப்படும் பெண்களுக்கான வாழ்வியல் நெறிமுறைகள் தற்காலத்தில் பெண்களால் கடைப்பிடிக்கப்படாத நெறிமுறைகளாக காணப்படுகின்றமையும் தெளிவாகின்றது.

## உசாத்துணைகள்


1. செல்வநாயகம்.வி, 1996, தமிழ் இலக்கிய வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
2. வரதராசன்.மு, 2006, தமிழ் இலக்கிய வரலாறு,சாகிம்திய அகாதெமி, புது தில்லி.
3. நாராயணவேலுப்பிள்ளை.எம், 2000, சங்ககாலம் வழங்கும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் : அறிமுக சுருக்கத் தொகுப்பு, நர்மதா பதிப்பகம், சென்னை.
4. வேலுப்பிள்ளை.ஆ, 1999, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ஸ்ரீ லங்கா புத்தக வெளியீடு, யாழ்ப்பாணம்.
5. விசுவநதம்.கி.ஆ.பெ, 1994, நான்மணிகள், பாரிநிலையம், சென்னை.
6. சிதம்பரனார்.சாமி, 2013, சாமி. சிதம்பரனார் நூற்களஞ்சியம், தமிழ்மண் பதிப்பகம்.
7. மாதவன்.வே.இரா, 2001, நான்மணிக்கடிகை மூலமும் பழைய உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
8. பக்தவத்சல பாரதி, (2005), பண்பாட்டு மானிடவியல், புதுவை- 605 008: வல்லினம் வெளியீடு, பக் (90-96).
9. பரிமளா.ச, பார்வதி.மா, திலகவதி,க, வசந்தா.ஜி, மாதவி.இரா, 2007, பன்முகநோக்கில் மகளிர்: தொகுதி-04, அகரம், தஞ்சாவூர்.
10. Lindsey. L, 2021, Gender Sociological Perspectives: 7th Edition, Routledge.
11. Janet Saltzman Chafetz, 2006, Handbook of the Sociology of Gender, Springer Science & Business Media, LLC.
12. Wharton. S.A, 2005, The Sociology of Gender : An Introduction to Theory and Research, Blackwell publishing, Australia.